அலுவலக அறிவிப்பு பலகைக்கு

# விழுப்புரம் மாவட்டம்

## சமையல் உதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் தொடர்பான அறிவிப்பு

## ந.க.எண்:2632844/2024/பிஇ4, நாள்:09.04.2025

விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களை மாதம் ரூ.3000/- வீதம் தொகுப்பூதிய முறையில் நிரப்பிடவும் இவர்களுக்கு ஓராண்டு கால பணிக்கு பிறகு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை -1 ரூ.3000-9000) ஊதியம் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து நியமனங்களுக்கும் அரசு விதிகளின்படி இனச்சுழற்சி முறை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு நிரப்பப்பட வேண்டிய பள்ளி சத்துணவு மைய வாரியாக இனச்சுழற்சி விபரங்கள், விண்ணப்ப படிவ மாதிரிகள், நியமனம் குறித்த விவரங்கள் அலுவலக தகவல் பலகையில் வெியிடப்பட்டுள்ளது.

### மேற்படி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள்

1) இப்பணிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2) வயது வரம்பு:09.04.2025 அன்று

| | |
|---|---|
| பொதுப்பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டடோர்/ சீர்மரபினர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவதாகவும் இருக்க வேண்டும். |
| பழங்குடியினர் | 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவதாகவும் இருக்க வேண்டும். |
| விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் | 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவதாகவும் இருக்க வேண்டும். |

3) கல்வித் தகுதி:

| கல்வித்தகுதி | குறிப்பு |
|---|---|
| 10-ஆம் வகுப்பு தேர்ச்சி/ தோல்வி | விண்ணப்பம் செய்வோர் கட்டாயம் தமிழில் சரளமாக எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |

4) சான்றுகள்:

| | |
|---|---|
| ஆதரவற்ற விதவை எனில் | விண்ணப்பத்துடன் வருவாய் கோட்டாட்சியரின் சான்று நகல் சமர்ப்பிப்பட வேண்டும். |
| விதவை, கணவனால் கைவிடப்பட்டோர் எனில் | விண்ணப்பத்துடன் வருவாய் வட்டாட்சியரின் சான்று நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

Scanned with OKEN Scanner

5) மாற்றுத்திறனாளி சான்று:

| தகுதியான மாற்றுத்திறனாளிகள் | குறிப்பு |
|---|---|
| 6) குறைவான பார்வைத் திறன் (மூக்குக்கண்ணாடி மூலம் சரி செய்யப்பட்டது)<br>7) உடல் இயக்க குறைபாடு (ஒரு கால்)<br>8) குணப்படுத்தப்பட்ட தொழுநோய் (40% கைகளின் முழு செயல்பாட்டுதிறன், உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது)<br>9) திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்கள்.<br>10) குறிப்பிட்ட கற்றல்திறன் குறைபாடு (மிதமான) | விண்ணப்பத்துடன் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

6) நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ-க்குள் இருக்க வேண்டும். (ஊராட்சி – குக்கிராமம்–வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை)

7) சிறுபான்மையினர் பள்ளிகள்:

- சிறுபான்மையினர் பள்ளிகளில் உள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு இனச்சுழற்சி முறை கடைப்பிடிக்க தேவையில்லை.
- நேர்காணலில் தகுதியின் அடிப்படையில் பட்டியலிட்டு பின்னர் சம்மந்தப்பட்ட பள்ளியின் தாளாளர்/ தலைமையாசிரியர் வரவழைத்து அப்பட்டியலை பார்வையிட அனுமதிக்க வேண்டும்.
- பட்டியல் பார்வையிட்ட 5 வேலை நாட்களில் அப்பட்டியலில் உள்ள 5 நபர்களை பள்ளி நிர்வாகம் பரிந்துரை செய்யலாம்.
- பள்ளி நிர்வாகம் பரிந்துரை செய்த 5 நபர்களில் ஒருவருக்கு பணி ஆணை நியமன அலுவலரால் வழங்கப்பட வேண்டும்.

8) விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச்சான்றிதழ், SSLC மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, சாதிச்சான்று போன்றவற்றின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்கள் இணைக்க வேண்டும்.

9) சத்துணவு உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை https://viluppuram.nic.in/ என்ற இணையதள முகவரியல் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 11.04.2025 முதல் 28.04.2025–ம் தேதி முடிய காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை சனிக்கிழமை உட்பட (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) தொடர்புடைய நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் மட்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

Scanned with OKEN Scanner

10) விண்ணப்பத்தினை சமர்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்கு பிறகு எந்த விண்ணபங்களும் பெறப்பட மாட்டாது. அஞ்சல் துறையின் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது ஏற்படும் காலதாமதங்களுக்கு துறை பொறுப்பேற்காது.

11) கல்வித்தகுதி மற்றும் பிற தகுதிகளுக்கு 50 மதிப்பெண்களும், நேர்முகத் தேர்விற்கு 50 மதிப்பெண்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் உரிய பரிசீலனைக்கு பிறகு தகுதிவாய்ந்த மனுதாரர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கான அழைப்பாணை அனுப்பப்படும். அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள தேதியில் குறிப்பிட்ட இடத்தில் நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பதாரர் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் நேரில் கலந்து கொள்ள வேண்டும்.

12) காரணம் ஏதும் குறிப்பிடாமல் நியமன அறிவுப்பு அறிவிக்கையினை இரத்து செய்வதற்கு/ திரும்ப பெறுவதற்கு/ திருத்துவதற்கு/ கெடு தேதியினை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆட்சியருக்கு முழு உரிமை உண்டு.

இடம்: விழுப்புரம்.
நாள்: 11.04.2025.

11/4/25

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (சத்துணவு),
விழுப்புரம்.

11/04/25

Scanned with OKEN Scanner